அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
# தமிழ்மொழி

பெயர்:- ______________________________

ஆண்டு 9

150 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ பல்தேர்வு வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூட்டுக்குள் புள்ளடி இடவும்!
- ☐ பகுதி 2 இற்குரிய விடைகளை நீல அல்லது கறுப்பு நிறப் பேனாவால் எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ வினாத்தாள், விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கித் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!

## பகுதி 1

தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக!

1. முத்தமிழ்க் காப்பியம் எனப்படுவது
   அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) நாலடியார்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

2. தமிழின் செம்மைத் தன்மையால் அதற்கு வந்த பெயர்
   அ) தீந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) செந்தமிழ் ஈ) இயற்றமிழ்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

3. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடலை எழுதியவர்
   அ) உருத்திரமூர்த்தி ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) இளங்கோவடிகள்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

4. கதிரவன் மறையும் மாலைநேரம் வானம் __________ இருந்தது.
   அ) கன்னங் கரியாக ஆ) செக்கச் சிவந்து இ) வெட்ட வெளியாக
   ஈ) கொதி கொதித்து
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

5. கீழ்வரும் சொற்களில் பகாச் சொல்
   அ) ஆடை ஆ) தமிழர் இ) உண்டான் ஈ) காவலன்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

6. மா + மரம் - இப்புணர்ச்சி
   அ) விகாரப்புணர்ச்சி ஆ) இயல்புப்புணர்ச்சி இ) மாறுபடுபுணர்ச்சி
   ஈ) திரிதல்புணர்ச்சி
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

7. தாயின் தாலாட்டு என்ற பாடலில் வீரமகன் எதற்காக உயிர் விடுகின்றான்
   அ) நட்புக்காக ஆ) தாய்க்காக இ) நாட்டுக்காக ஈ) பகைக்காக
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

8. புறநானூறு கூறுவது
அ) நாட்டுப்பற்றை ஆ) வாழ்வியலை இ) பண்பாட்டை ஈ) வீரத்தை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

9. அருள் + கொடை இதைச் சேர்த்து எழுதினால்
அ) அருள்கொடை ஆ) அருள்க்கொடை இ) அருட்கொடை ஈ) அரும்கொடை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

10. கதிரவனைக் குறிக்கும் இன்னொரு சொல்
அ) வெய்யோன் ஆ) வேந்தன் இ) கொற்றவன் ஈ) புகழவன்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

11. பழந்தமிழர் நிலங்களுக்கு இட்ட பெயர்கள், அந்தந்த நிலங்களில் அதிகமாக உள்ள ____________ பெயர்களாகும்.
அ) மரங்களின் ஆ) பூக்களின் இ) பழங்களின் ஈ) விலங்குகளின்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

12. கட்டித்தழுவி - இத்தொடர்
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி இ) இணைமொழி ஈ) மரபுத்தொடர்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

13. குணப்பெயருக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொல்
அ) இலை ஆ) சிரித்தல் இ) பகல் ஈ) கருமை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

14. புலவரும் வறுமையும் என்ற பாடலில், புலவர் தனக்குத் தூதாக அனுப்பியது
அ) காகம் ஆ) புறா இ) கொக்கு ஈ) நாரை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

15. பவளவாய் - இதில் பொதுத்தன்மை
அ) வாய் ஆ) பவளம் இ) பவளநிறம் ஈ) அழகு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

16. கடலும் கடல் சார்ந்த இடமும்
அ) மருதம் ஆ) நெய்தல் இ) குறிஞ்சி ஈ) முல்லை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

17. கற்காதவர்களும் பொருள் அறியக் கூடிய சொற்கள்
அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) வடசொல் ஈ) திசைச்சொல்

அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

18. வெள்ளம் கங்குகரை இன்றிப் பாய்ந்தது. இங்கு கங்குகரை என்பது
அ) நாள் முழுவதும் ஆ) நாலாபக்கமும் இ) எல்லை ஈ) ஏற்ற இறக்கம்

அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

19. பின்வருவனவற்றுள் நீர்ப்பூ அல்லாதது
அ) செங்கழுநீர் ஆ) நீலோற்பவம் இ) தாமரை ஈ) செவ்வரத்தை

அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

20. தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்களுக்கு ஒப்பிடப்படுவது
அ) முற்றிய நெற்பொதிக்கு ஆ) பெரு மழைக்கு இ) நடனமாடும் பெண்களுக்கு
ஈ) சூறாவளிக் காற்றுக்கு

அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

(20 புள்ளிகள்)

## பகுதி 2

### 1) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் உள்ளடக்கத்தை வாழிட மொழியில் எழுதுக!

இன்றைய சூழலில் சுத்தமான காற்றை சுவாசிக்க முடிவதில்லை. சுத்தமான நீரைப் பருக முடியாத நிலை உள்ளது. நீர், நிலம் இவ்விரண்டுமே தனது தன்மையை இழந்து வருகின்றது. நீர் நிலைகள் அழிந்தும், காட்டு வளங்கள் அருகியும் வருவதால், நாம் இதுபோன்ற பல்வேறு இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இயற்கை வளங்கள், இன்று அருகி வருவதைக் காண்கின்றோம். நீர், மணல், காடுகள், காட்டு உயிர்கள், புல்வெளிகள் என எண்ணற்ற இயற்கை வளங்களை நாம் பெற்றுள்ளோம். மனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்து வருகின்றான்.

இயற்கைக்கு மாறாக அதிகரித்து வரும் நகரமயமாதல், தொழில்மயமாதல், மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்களால் மாசுபட்ட நீர் நிலைகள், வறண்ட நீர் நிலைகள் என இயற்கை வளங்கள் அருகி வருகின்றன.

(10 புள்ளிகள்)

### 2) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில மொழியிலுள்ள பந்தியைத் தமிழில் மாற்றி எழுதுக!

It was around midnight when Yalini woke up. At first she didn‘t know what had woken her up, but suddenly she heard a noise , which was coming from downstairs. She was frightened and didn‘t want to get out of bed because it was dark and she couldn‘t see anything. However, she decided to go and investigate the frightening sounds. She got out of her bed and made her way downstairs. The stairs creaked with each movement that she made, so she had to walk slowly and carefully. She didn‘t want anybody to hear her.

The noise was coming out of the kitchen, so that was where she wanted to go first. She put her head around the door and saw a big shadow, which looked like a monster. Yalini walked slowly into the kitchen, switched on the light and saw…

(10 புள்ளிகள்)

3) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

பட்டாசு (வெடி) வெடிப்பதால் ஏற்படும் முதல் பாதிப்பு அதிலிருந்து வரும் பெரும் அதிர்வு ஒலி. இது நம் காதுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். உயிரினங்களின் நடத்தை முறையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். பட்டாசு ஒலியால் வீட்டு வளர்ப்புப் பிராணிகள், பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், சிறு பூச்சியினங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. அவற்றின் இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது.

உலகச் சுகாதார நிறுவனம், வகுத்துள்ள வரையறையின்படி இரவில் 35 டெசிபலுக்கு மேலே சத்தம் ஏற்பட்டால், மனிதர்களிடையே தூக்கக்கோளாறு ஏற்படலாம். பகலில் 55 டெசிபலுக்கு மேல் ஒலி இருக்கக் கூடாது என்று அது வரையறுத்திருக்கின்றது. ஆனால், பட்டாசு வெடிக்கும் போது 140 டெசிபலுக்கு மேல் ஒலி மாசு ஏற்படுகின்றது. பட்டாசு வெடிக்கும்போது அதில் பயன்படுத்தப்பட்ட பேரியம்(Ba) (பச்சை நிறத்துக்கு), சோடியம்(Na) (மஞ்சள் நிறத்துக்கு), தாமிரம்(Cu) (நீல நிறத்துக்கு), ஸ்டிராண்டியம்(Sr), (சிவப்பு நிறத்துக்கு), அலுமினியம்(Al), காரீயம்(C), பாதரசம்(Hu), ஆண்டிமணி(Sb), டெக்ஸ்டிரின், மாங்கனீசு(Mn), பொஸ்பரஸ்(P), பொட்டாசியம் குளோரைட்டு, டைட்டானியம்(Ti), சல்பர் டை ஒக்சைடுட், நைட்ரிக் ஒக்சைட் உள்ளிட்ட நச்சு வேதிப்பொருட்கள் உள்ளன.

பட்டாசு, மத்தாப்புகளில் இருக்கும் வெடிமருந்துகள் வெடிக்கப்பட்டு 80 நாட்களுக்கு மண்ணில் வீரியம் குறையாமல் காணப்படும். இதனால் மண்ணின் தன்மை சீர்கெடும். மண்ணில் உயிர்வாழும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் இதனால் அழிகின்றன. மண்ணில் தங்கியிருக்கும் இந்த வெடிமருந்துகள் மழை பெய்யும்போது, மழைத் தண்ணீரோடு அடித்துக்கொண்டு போய் ஆறு, குளம், கடலில் கலக்கலாம். இதனால் அப்பகுதியின் சூழலியல் தொகுதி பாதிக்கப்படும். தொடர்ச்சியாக அதன் உயிர்ச்சங்கிலியில் உள்ள உயிரினங்களும், தாவரங்களும் பாதிக்கப்படும். தண்ணீர் மாசுபாடும் ஏற்படும். குறிப்பாக அதிக ஒலி, புகையை வெளிப்படுத்தும் பட்டாசுகளைத் தவிர்க்க வேண்டும். நீர்நிலை, இயற்கை சார்ந்த இடங்கள், இயற்கை உயிரினங்கள், வளர்ப்புப் பிராணிகள் அதிகமுள்ள இடங்களில் பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

சில பகுதிகளில் சுற்றுச்சூழலுக்கு நட்பான பட்டாசுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றிலிருந்து புகை, நெருப்பு, நச்சுப்பொருட்கள் அதிக அளவில் வெளியேறுவதில்லை. குறைந்த சத்தம், ஒளிரும் காகிதத்துடன் கூடிய துகள்களையே இவை வெளியிடுகின்றன. இது போன்ற பட்டாசுகளை வெடித்தோ, விளக்குகளை ஏற்றியோ கொண்டாட்டங்களை கொண்டாடுவது நல்லது.

1. பட்டாசுகள் வெடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. பட்டாசுகளில் உள்ள நச்சு வேதியற் பொருட்கள் எவ்வாறு மண்ணை மாசுபடுத்துகின்றன?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. எந்த இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. பட்டாசு வெடிப்பதால் சூழலியற் தொகுதி எவ்வாறு பாதிப்படைகின்றது?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. கொண்டாட்டங்களில் பட்டாசுகளை வெடிக்க விரும்புபவர்கள் எப்படியான பட்டாசுத் தெரிவுகளைச் செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(15 புள்ளிகள்)

4) பின்வரும் பாடலைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக!

செந்தமிழ் நாட்டினிலே - வாழ்கின்ற
சேயிழையார் எவரும்

வந்த விருந்தோம்பும் - வழக்கத்தை
வாய்விட்டுச் சொல்லுகையில்

அந்தத் தமிழ் அன்னையின் - முகத்தினில்
அன்பு பெருகியதை

எந்த வகை உரைப்பேன்! - கேட்டபின்பும்
இன்னும் சொல் என்றுரைத்தார்!

கிட்ட நெருங்கி எனைப் - பிள்ளாய் என்று
கெஞ்சி நறுந்தேனைச்

சொட்டு வதைப்போலே - வாய் திறந்து
சொல்லொரு பாடல் என்றார்

கட்டுக் கரும்பான - இசைத்தமிழ்
காதினிற் கேட்டவுடன்

எட்டுவகைச் செல்வமும் - தாம் பெற்றார்
என்னைச் சுமந்து பெற்றார்

1. செந்தமிழ் நாட்டுப் பெண்களிடம் காணப்பட்ட சிறந்த பண்பாட்டு வழக்கம் யாது?

________________________________________

________________________________________

2. அன்னை தன் குழந்தையை எப்படிப் பாடச் சொல்லிக் கேட்கின்றார்?

________________________________________

________________________________________

3. எட்டுவகைச் செல்வமும் பெற்ற உணர்வு அன்னைக்கு எப்போது உண்டாயிற்று?

________________________________________

________________________________________

4. இசைத்தமிழ் இனிமையானது என்பதைக் கவிஞர் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்?

________________________________________

________________________________________

5. இப்பாடல் மூலம் கவிஞர் உணர்த்த விரும்புவது யாது?

________________________________________

________________________________________

(10 புள்ளிகள்)

5) படத்தைப் பார்க்கும் போது உமக்குத் தோன்றுவதை 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக!

(15 புள்ளிகள்)



6) கீழேயுள்ள விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக!

அ) நீங்கள் அண்மையில் பார்த்து மகிழ்ந்த ஒரு திரைப்படம்.

ஆ) நான் விரும்பும் தொழில்.

இ) வாழ்வில் மறக்க முடியாத நாள்.

(20 புள்ளிகள்)